[28th August 1961

கிறார்கள். ஆகவே கட்டாயமாக இரண்டு வருடம் கிராமப் புறங்களில் போய் சேவை செய்யவேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்துமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்கு அவசிய மிருக்காது. இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் நிறைய டாக்டர்கள் வருகிறார்கள். இதுவரை கிராமங்களுக்குப் போகாமல் இருந்தார்கள். இப்போது அப்படியில்லை. இவர்கள் சென்னையில் சுகமாக இருந்து படித்துவிட்டு, கல்யாணம் செய்துகொண்டு கிராமப்புறங்களில் போய் இருக்கவேண்டும் என்று சொல்லும் போது அவர்கள் போக மறுக்கிறார்கள். அதோடு அவர்கள் பிள்ளைகளுக்கு நகரப்புறங்களில் இருப்பது போன்று படிப்பு வசதியில்லை. எனது சகா மின்சார அமைச்சர் அவர்கள் எவ்வளவுதான் மின்சாரத்தை விஸ்தரித்துக்கொடுத்த போதிலும் மின்சாரம் வராத கிராமங்களில் இருக்கவும் அவர்கள் விரும்புவதில்லை. இனி மேல் அம்மாதிரியான கஷ்டங்கள் ஏற்படாது என்று எண்ணுகிறேன்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஸார், இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் சரிவர வேலை பார்க்க வருவதில்லை. போக்குவரத்து வசதிகளோ அல்லது தங்குவதற்கான வசதிகளோ இல்லாத காரணத்தினால்தான் கிராமப் புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் தங்குவதற்கு முன்வரவில்லை. அந்த மாதிரி நிலையங்களில் இருக்கக்கூடிய டாக்டர்களுக்கு போக்குவரத்து வசதிகளும் மற்ற வசதிகளும் செய்து கொடுத்தால் நிரந்தரமாக அவர்கள் தங்குவதற்கு வசதி ஏற்படும். இதை அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் சொல்லுவது பழைய பல்லவி. அதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. இப்போது சூழ்நிலை மாறியிருக்கிறது. இரண்டு இடங்களில்தான் டாக்டர்கள் இல்லை. போஸ்ட் பண்ணப்பட்டவர் போய்ச் சேராததால்தான் அங்கேயும் இல்லை. கூடிய சீக்கிரம் டாக்டர்களைப் போட்டு விடலாம். அந்த மாதிரி கஷ்டம் இனிமேல் இருக்காது.

Rural Industrial Estates

* 1448 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வடஆற்காடு மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் கிராமத் தொழிற் பேட்டை ஆரம்பிக்கப்படும்.

(இ) போளூரில் ஆரம்பிப்பது எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Industrial estates at Arkonam and Katpadi will start functioning in the Third Five-Year Plan Period.

(இ) There is no proposal to start an Industrial Estate at Polur.

28th August 1961]

Sri S. M. ANNAMALAI : வட ஆற்காடு மாவட்டம் மிகவும் பிற்போக்கான மாவட்டம். கைத்தொழில் முன்னேற்றத்திலும் பின் அடைந்துள்ள மாவட்டம். ஏன் சர்க்கார் எல்லா தாலுகா நகரங்களிலும் இந்த மாதிரி பேட்டைகளை ஆரம்பிக்க முன் வரக் கூடாது? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது எல்லா தாலுகாக்களிலும் ஆரம்பிக்கும் திட்டம் இருக்கிறதா?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் கேள்விக்குத் தானே பதில் சொல்லிவிட்டார். பிற்போக்கான தாலுகா என்று சொன்னார். பிற்போக்கான இடத்தில் தொழில் பேட்டை வருவது கஷ்டம். ஏதோ சர்க்கார் தொழிற்சாலை வைக்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் என்றால் தொழிற்சாலைகளை வைக்க கட்டிடம் கட்டிக் கொடுக்கிறோம். எஸ்டேட் ஏற்படுத்தினால் தொழிற்சாலைகளை வைக்க யாராவது முன் வரவேண்டும். இல்லாவிட்டால் கட்டப்பட்ட கட்டிடங்கள் பாழாக நின்றுகொண்டிருக்கும். ஆகையால்தான் இரண்டு எஸ்டேட்டுக்கு மேல் வசதியில்லை என்று சர்க்கார் நினைக்கிறது.

Work-sheds

*1449 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the scheme of providing work-sheds and developed plots for Industrial purposes; and

(*b*) the number of centres to be selected for each district during the Third Plan Period?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government have sanctioned the establishment of four worksheds in the Tiruchirappalli district for synthetic stone workers and four work-sheds in the Tirunelveli district for carpentry and blacksmithy workers. It is also proposed to construct a number of work-sheds in the city for the iron and steel fabricators in the Walltax Road area. Another scheme has been sanctioned for the acquisition of 354 acres at Guindy and 330 acres at Avadi-Ambattur for giving plots on lease or on sale to industrialists for construction of buildings according to their requirements. These plots will be handed over after improving them by providing necessary facilities like electricity, roads, water-supply, etc.

Sri M. KALYANASUNDARAM : ஸார், பெரும்பாலும் சென்னை நகரத்தைச்சுற்றி ஓரளவுக்கு தொழிற்சாலைகள் நடத்த வசதிகள் செய்துகொடுக்கப்படுகிறது. பீடித் தொழில் சட்டத்தைக் கூட அமுல் நடத்த முதலாளிகள் மறுக்கிறார்கள். பீடித் தொழில் அதிகமாக இருக்கக்கூடிய திருச்சி, வேலூர் போன்ற இடங்களில் பீடித் தொழிற்சாலைகளை அமைக்க கட்டிடங்கள் கட்டிக்கொள்ள இடம் கொடுக்கலாம். அதையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுமா?